**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**திருப்புவனம்**
**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2025– ம் ஆண்டு நவம்பர் மாதம் 05–ம் நாள் புதன்கிழமை**
**IA 5/2025**
**in**
**IA 3/2022**
**in**
**OS no.13/2020**
**---**

ராஜேந்திரன்

......மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

**/எதிர்/**

கிருஷ்ணம்மாள்

.....எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 01.11.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும் .எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும்,ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

ஐ.ஏ.எண்.3/2022 என்கிற நீதிமன்ற ஆணையர் நியமன மனுவில் ஆணையர்/அட்வகேட் திரு.M.ராமலிங்கம் அவர்களால் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் மாதிரி வரைப்படத்தை strikeout செய்துக்கொண்டு புதிய நீதிமன்ற ஆணையராக சமூகம் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்து, தாவா வழக்கிடைச் சொத்தின் இயற்கை அமைப்பு, உண்மை தன்மை சொரூபநிலை ஆகியவைகளை நில அளவை மேற்கொண்டும், தன்னுடைய வீடு எவ்வளவு காலத்திற்கு முன்பு கட்டப்பட்டது அதன் வயது மற்றும் கட்டுமானத்தின் தன்மை குறித்து அறிய கட்டிடப் பொறியாளர் உதவியுடன் அளவை செய்து பொறியாளரிடம் அறிக்கை பெற்றும், தேவைப்பட்டால் புகைப்பட நிபுணரின் உதவியோடு புகைப்படங்கள் எடுக்க அனுமதி அளித்தும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்திட ஏதுவாக புதிய நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி ஆர்டர் 26 ரூல் 9 மற்றும் செக்ஷன் 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர்/வாதியால் ஐ.ஏ.எண்.3/2022 என்ற எண்ணில் நீதிமன்ற ஆணையர் நியமன மனுதாக்கல் செய்திருந்ததாகவும், அதில் நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.11.05 16:45:17 +0530

திரு.எம்.ராமலிங்கம் அவர்களை நியமனம் செய்து, தாவா சொத்தை 29.07.2023ம் தேதி நேரில் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி நீதிமன்ற ஆணையர் முன்பு தங்கள் தரப்பில் புல எண்.81/2ஐ வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் பிர்க்கா சர்வேயர் மூலமாக சர்வே கற்களிலிருந்து அளந்து நான்கு பக்க எல்லைகளை நிர்ணயம் செய்யப்பட்டது என்பதை ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்பதையும், வடகிழக்கு மூலையிலும் தென்கிழக்கு மூலையிலும் ரயில்வே துறையால் ஏற்படுத்தப்பட்ட எல்லை கற்களை அடிப்படையாகக் கொண்டு நில அளவையர் தாவா சொத்தை அளந்து நிர்ணயம் செய்ததாக மட்டுமே குறிப்பிட்டுள்ளார் என்பதை ஆட்சேபனை குறிப்பாணையில் தெரிவித்துள்ளதாகவும், அதேபோல் புல எண்.81/2 சொத்தின் நான்குமால்களையும் இயற்கை அமைப்பையும் எவ்வளவு விஸ்தீரணத்தில் காணப்பட்டது என்பதையும் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட தவறிவிட்டதாகவும், அதேபோல் புல எண்.81/2A புல எண்.81/2B ஆகியவற்றின் நான்குமால் விபரங்களையும் அதன் அமைப்பு விபரங்களையும் எத்தனை அடி அளவுகளில் காணப்பட்டது என்பதையும் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டு கூற தவறிவிட்டதாகவும், அதேபோல் புல எண்.81/2A மற்றும் புல எண்.81/2B ஆகியவை வருவாய்துறை ஆவணங்களில் யார் யார் பெயரில் காணப்பட்டது என்பதை கூற தவறிவிட்டார் என்பதை தனது ஆட்சேபனை குறிப்பாணையில் தெளிவுபடுத்தியுள்ளதாகவும், அதேபோல் தனக்கு பாத்தியமான புல எண்.81/2Bல் இந்த வாதி எந்தெந்தப் பகுதியில் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதையும், அதில் வாதியால் ஏற்படுத்தப்பட்ட கட்டுமானம் எவ்வளவு ? காலியிடம் எவ்வளவு? என்பதை தனித்தனியாக அறிக்கையிலும் வரைபடத்திலும் கூற தவறவிட்டார் என்றும், அதேபோல் புல எண்.81/2Bல் வாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இயற்கை அமைப்பு பகுதிகளையும் வரைபடத்திலும், அறிக்கையிலும் தெளிவுபடுத்த தவறிவிட்டதாகவும், அதேபோல் தாவா சொத்தை வரைபடத்தில் ABCD என குறிப்பிட்டு காண்பித்துள்ளதாகவும், மேற்படி ABCD என்ற பகுதி கிழமேல் எத்தனை அடி, தென்வடல் எத்தனை அடி என்பதை தனித்தனியாக வரைபடத்திலும், அறிக்கையிலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், அதேபோல் DCEF என்ற பகுதியை வரைபடத்தில் கிழமேல் தென்வடல் அடி அளவுகள் பற்றி தெளிவாக குறிப்பிடவில்லை என்றும், அதேபோல் நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்ட சமயம் மேற்கண்ட விபரங்களையெல்லாம் தனது அறிக்கையிலும், வரைபடத்திலும் தெளிவுபட கூற வேண்டும் என்றும், புல எண்.81/2A மற்றும் புல எண்.81/2Bல் உள்ள கட்டுமாங்களுக்கிடையே வாதி மற்றும் தனக்கு பாத்தியமான காலியிடம் பூமியில் பாதையாக காணப்பட்டது என்பதை ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டு கூற வேண்டும் என்பதையும் தனது தரப்பில் தாக்கல் செய்துள்ள கருத்துரை குறிப்பாணையில் தெளிவுபடுத்தியிருந்ததாகவும், மேற்கண்ட விபரங்களையும் தன்னால் நீதிமன்ற ஆணையருக்கு கொடுத்த கருத்துரை குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை ஆணையர் அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என கேட்டுக்கொண்டும், நீதிமன்ற ஆணையர் குறிப்பிட தவறிவிட்டதாகவும், மேலும் தனது அறிக்கையில் பாரா 2ல் வருவாய்துறை புலப்படத்தில் எல்லை கற்கள் 5 என்றும், 6 என்றும் புள்ளிகளாக இருந்தது என்றும், எல்லைக் கற்களுக்கிடையே கயிறு கட்டப்பட்டு தாவா மொத்த சொத்தான புல எண்.81/2ன் கிழக்கு அத்துமாலாக நிர்ணயம் செய்யப்பட்டு அதனடிப்படையில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் வீடு அமைந்துள்ளதை நில அளவையர் தன் முன் அளந்து நிர்ணயம் செய்தார் என குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் புல எண்.81/2ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு இருந்தது என்பதை அறிக்கையிலும், வரைபடத்திலும் தெளிவுபடுத்த தவறிவிட்டதாகவும், அதேபோல் வாதியின் வீட்டையும்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.11.05 16:45:23 +0530

தனது வீட்டையும் துல்லியமாக நில அளவை செய்துள்ளதாகவும் என குறிப்பிட்டுள்ளதில் வாதியின் காலியிடம் எவ்வளவு? வீடு எவ்வளவு? தனது காலியிடம் எவ்வளவு? வீடு எவ்வளவு? என்பதை அடி அளவுகளின் படியும் தெளிவுபடுத்த தவறிவிட்டதாகவும், வாதி தனது பிராது சொத்து விபரத்தில் பழைய புல எண்.81/2 என்றும், தற்பொழுது புதிய புல எண்.82A என்றும், விஸ்தீரணம் 19 சென்டில் கீழ்புறத்தில் நடுப்புறம் கிழமேல் 11 அடி தென்வடல் 30 அடி வாதி கிரையம் பெற்ற இடத்தில் கிழமேல் 3 1/2 அடி தென்வடலாக 24 அடி பிரதிவாதியின் ஆக்கிரமிப்பு கட்டிடம் என பிராது சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் பூமியில் இருந்த அடி அளவுகளை நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தெளிவுபடுத்தாமல் இருப்பதாலும் புல எண்.81/2A புல எண்.81/2B ஆகிய புலங்களை மட்டுமே அளவை செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் பிராதில் புல எண்.81/1 ஆக இருந்து வந்தது எனவும், புதிய புல எண்.82/A என்று தான் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்கண்ட புல எண் தவறு என தங்கள் தரப்பில் தெரிவித்ததன் அடிப்படையிலேயே வாதி தரப்பில் சீர்த்திருத்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது என்றும், ஆனால் அறிக்கையில் புல எண்.81/2ஐ தான் அளந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், உண்மையிலேயே வாதி குறிப்பிடும் புல எண்.82/A என்று இருந்ததை ஆணையர் வருவாய் துறை ஆவணங்களை correlate செய்து கிராம நிர்வாக அலுவலரிடமோ, நில அளவையரிடமோ சொத்து விபரத்தில் உள்ள புல எண்ணுக்கும் பூமியில் அளவை செய்யும் புல எண்ணுக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்தும், அதற்கான மாறுதல்கள் ஏற்பட்ட விபரங்கள் குறித்தும் தெளிவாக கேட்டு அறிந்து அறிக்கையில் குறிப்பிடாமலும், வரைபடத்தில் துலக்காமலும் நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளதாகவும், அதன்படி நிலஅளவை செய்த சொத்திற்கும் சொத்து விபரத்தில் கண்ட சொத்திற்கும் மாறுபாடு உள்ளது என்றும், எனவே ஐ.ஏ.எண்.3/2022 என்கிற நீதிமன்ற ஆணையர் நியமன மனுவில் ஆணையர்/அட்வகேட் திரு.M.ராமலிங்கம் அவர்களால் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் மாதிரி வரைப்படத்தை strikeout செய்துக்கொண்டு புதிய நீதிமன்ற ஆணையராக சமூகம் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்து, தாவா வழக்கிடைச் சொத்தின் இயற்கை அமைப்பு, உண்மை தன்மை சொரூபநிலை ஆகியவைகளை நில அளவை மேற்கொண்டும், தன்னுடைய வீடு எவ்வளவு காலத்திற்கு முன்பு கட்டப்பட்டது அதன் வயது மற்றும் கட்டுமானத்தின் தன்மை குறித்து அறிய கட்டிடப் பொறியாளர் உதவியுடன் அளவை செய்து பொறியாளரிடம் அறிக்கை பெற்றும், தேவைப்பட்டால் புகைப்பட நிபுணரின் உதவியோடு புகைப்படங்கள் எடுக்க அனுமதி அளித்தும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்திட ஏதுவாக புதிய நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:-</u>**

மனுவை ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரருக்கு யாதொரு பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், ஐ.ஏ.எண்.3/2022ல் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்த பின்னர் 26.11.2022ம் தேதி பார்வையிட்ட பொழுது கிராம நிர்வாக அதிகாரியிடம் இருந்த UDR காலத்திய வருவாய்துறை ஆவணங்களையே கொண்டு வந்தனர் என்பதாலும் அதில் பல பக்கங்கள் கிழிந்து நசிந்தும் அளவுகள் தெரியாதபடி இருந்தது என்பதாலும், தாவா சொத்தின் புல வரைபடம் (FMB) பாதி மட்டுமே இருந்தது என்பதாலும் மீதி கிழிந்து

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.05 16:45:29 +0530

இருந்தது என்றும், பிர்கா சர்வேயரால் தாவாசொத்தை சரியானபடி நில அளவை செய்து நிர்ணயம் செய்ய இயலவில்லை என்றும் அதனால் தங்கள் தரப்பில் தாவா சொத்தை நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்திட உத்தரவிட வேண்டி தங்கள் தரப்பில் மெமோ தாக்கல் செய்யப்பட்டது என்றும், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தான புல எண்.81/2 என்பதை நிர்ணயம் செய்திட மேற்படி புல எண்ணிற்கு வடகிழக்கு மூலையிலும் தென்கிழக்கு மூலையிலும் ரயில்வே துறையால் ஏற்படுத்தப்பட்ட எல்லை கற்களை அடிப்படையாக கொண்டு நீதிமன்ற ஆணையரின் மேற்பார்வையில் தாலுகா தலைமை நில அளவையர் அவர்கள் தாவா சொத்தை அளந்து நிர்ணயம் செய்ததாகவும், மேற்படி எல்லை கற்களும் வருவாய்துறை நிலபுலப்படத்தில் 5 என்றும் 6 என்றும் புள்ளிகளாக குறிப்பிடப்பட்டு உள்ளது என்றும், அதனை நீதிமன்ற ஆணையர் அவர்களும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுளளதாகவும், the scope of the commission is only to findout the measurement of encroach by the defendant not for fixing the age of building என நீதிமன்ற உத்தரவின்படியே நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதியின் தார்சு வீட்டின் புதிதாக கட்டப்பட்ட மேற்புற பகுதியானது வாதிக்கு கிரைய பாத்தியமான 11 x 30 அளவிற்குள் கிழமேல் 3 1/2 அடியும் தென்வடலாக 24 அடியும் கட்டப்பட்டிருந்ததை நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகவும், ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தங்கள் தரப்புக்கு சாதகமாக இல்லை என்பதால் வழக்கின் விசாரணையை நடத்திடாமல் காலம் கடத்திடவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடனேயே பின்யோசனையாக இந்த மனுவினை மனுதார் தாக்கல் செய்துள்ளதாகவும், மனு அனுமதிக்கப்பட்டால் தனக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

5. இருபுறமும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6. மனுதாரர் ஐ.ஏ.3/2022 மனுவின் எதிர்மனுதாரரும் அசல் வழக்கில் பிரதிவாதியும் ஆவார். மனுதாரர் இந்த நிர் மனுவை ஏற்கனவே சமூக நீதிமன்றத்தில் ஐ.ஏ.3/2022 என்கிற நீதிமன்ற ஆணையர் நியமன மனுவில் ஆணையாளர்/அட்வகேட் திரு.M.ராமலிங்கம் B.A.,B.L. அவர்களால் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை strikeout செய்துக்கொண்டு புதிய நீதிமன்ற ஆணையராக சமூக நீதிமன்றம் மூத்த வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்யக்கோரியும் தாவா வழக்கிடை சொத்தின் இயற்கை அமைப்பு, உண்மை தன்மை, சொரூப நிலை ஆகியவைகளை நில அளவை மேற்கொண்டும் மனுதாரரின் வீடு எவ்வளவு காலத்திற்கு முன்பு கட்டப்பட்டது அதன் வயது மற்றும் கட்டுமானத்தின் தன்மை குறித்து அறிய கட்டிட பொறியாளர் உதவியுடன் அளவை செய்து பொறியாளரிடம் அறிக்கை பெற்றும் தேவைப்பட்டால் புகைப்பட நிபுணரின் உதவியோடு புகைப்படம் எடுக்க அனுமதியளித்தும் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்திட ஏதுவாக புதிய நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து உத்தரவிட

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.05 16:45:35 +0530

வேண்டி தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தனது மனு அபிடவிட்டில் நீதிமன்ற ஆணையராக ஐ.ஏ.3/2022 மனுவில் திரு.M.ராமலிங்கம் அவர்களை நியமனம் செய்து தாவா சொத்தை கடந்த 29.07.2023ம் தேதி நேரில் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் நான்கு எல்லைகளையும் இயற்கை அமைப்பையும் அதன் விஸ்தீரணத்தையும் குறிப்பிட தவறவிட்டதாகவும், புல எண்.81/2A மற்றும் 81/2B ஆகியவற்றின் 4 மால் விபரங்களையும் அதன் அமைப்பு விபரங்களையும் அடி அளவுகளையும் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றும், வருவாய் துறை ஆவணங்களில் யார் யார் பெயரில் காணப்பட்டது என்பதை கூற தவறவிட்டதாகவும், தனது ஆட்சேபனை மனுவில் தெரியபடுத்தியுள்ளதாகவும், அதேபோல் மனுதாரருக்கு பாத்தியமான புல எண்.81/2Bல் வாதி எந்தெந்த பகுதியில் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதையும் அதில் வாதியால் ஏற்படுத்தப்பட்ட கட்டுமானம் எவ்வளவு? காலியிடம் எவ்வளவு? என்பதை தனித்தனியாக அறிக்கையிலும் வரைபடத்திலும் குறிப்பிட்டு கூற தவறவிட்டதாகவும், புல எண்.81/2Bல் வாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இயற்கை அமைப்பு பகுதிகளையும் வரைபடம் மற்றும் அறிக்கையில் தெளிவுப்படுத்த தவறவிட்டதாகவும், மனுதாரர் செய்து வரும் எதிர்வாதத்துக்கும் அவரது கட்சிக்கும் முரண்பாடு இருக்கும் வகையில் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்தினையும் வாதி சொத்து விபரத்தில் கூறியுள்ள புல எண்ணையும் அறிக்கை மற்றும் வரைபடத்தில் கூறியுள்ள புல எண்ணையும் வருவாய் துறையினரிடம் சரியான விளக்கம் கேட்டு நில அளவை செய்ய தவறவிட்டதால் ஏற்கனவே ஐ.ஏ.3/2022 என்ற ஆணையர் நியமன மனுவின் மீது தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை strikeout செய்துக்கொண்டு புதிய ஒரு நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து மீண்டும் தாவா வழக்கிடை சொத்தை நேரில் பார்வையிட்டும் திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள வருவாய் ஆவணங்களான அ பதிவேடு மற்றும் மானாமதுரை GR கிராம கணக்கு மற்றும் புலப்பட வரைபட சுவடியையும் திருப்பாச்சேத்தி தெற்கு குரூப் கிராம நிர்வாக அலுவலர் மூலமாகவும், எனது தரப்பு கிரைய ஆவணமான 07.07.1999ம் தேதிய கிரையப்பத்திரத்தின் படியும் திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் வட்டசார் அலுவலரோ அல்லது சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள நில அளவை பிரிவில் பணிபுரிந்து வரும் அதன் உதவி இயக்குநரோ அல்லது சர்வே ஆய்வாளர் மூலமாகவோ நில அளவை செய்தும் தேவைப்பட்டால் புகைப்பட நிபுணரின் உதவியோடு புகைப்படங்கள் எடுக்கவும், தாவா வழக்கிடை சொத்தின் உண்மை தன்மை சொரூப நிலை ஆகியவைகளை நில அளவை செய்து மேற்கொண்டு மனுதாரரின் வீடு எவ்வளவு காலத்திற்கு முன்பு கட்டப்பட்டது அதன் வயது மற்றும் தன்மை குறித்து அறிய கட்டிட பொறியாளர் உதவியுடன் அளவை செய்து பொறியாளரின் அறிக்கை பெற்று வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக புதிய நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து ஏற்கனவே ஆணையாளர்/அட்வகேட் திரு.M.ராமலிங்கம் B.A.,B.L., அவர்கள் தாக்கல் செய்த நீதிமனற் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை strikeout செய்துக்கொண்டு புதிய நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.11.05 16:45:41 +0530

8. மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே இந்த மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை struckoff செய்திட வேண்டுமென்று மனுதாக்கல் செய்து அதுவும் ஐ.ஏ.4/2022 என எண்ணிடப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்து விசாரணைக்காக வந்த நிலையில் கடந்த 26.06.2025ம் தேதி மேற்படி மனுவினை மேல்நடத்திடாமல் not pressed செய்து புதிதாக இந்த மனுவினை மீண்டும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தினை struckoff செய்திட வேண்டுமென்று கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், சமூகம் நீதிமன்றத்தில் ஐ.ஏ.3/2022ல் ஆணையர் நியமனம் செய்த பின்னர் 26.11.2022ம் தேதி பார்வையிட்ட போது கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்த யுடிஆர் காலத்திய வருவாய் ஆவணங்களை கொண்டு வந்ததாகவும், the scope of the commission is only to find out the measurement of encroach by the defendant not for fixing the age of building என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும் எதிர்மனுதாரர் தனது வாதுரையில் நீதிமன்ற ஆணையர் மனுவானது சாட்சியங்களை திரட்டுவதற்கு தாக்கல் செய்ய முடியாது என்றும், மனுதாரர் கட்டிடத்தின் வயதினை நீதிமன்ற ஆணையர் கட்டிட பொறியாளர் உதவியுடன் நிர்ணயம் செய்திட வேண்டுமென்று கோரியுள்ள நிலையில், மேற்படி கோரிக்கையை மனுதாரர் புதிதாக மனு தாக்கல் செய்து அதன் மூலமாகவே நீதிமன்ற ஆணையர் கட்டிட பொறியாளர் உதவியுடன் நிர்ணயம் செய்ய முடியும் என்றும், ஏற்கனவே எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த ஆணையர் நியமன மனுவில் நீதிமன்றம் குறிப்பிட்டவைகளை ஆணையர் செய்து முடித்துள்ளதாகவும், புதிதாக மனுதாரர் கோரும் கட்டிட வயதை நிர்ணயம் செய்திட வேண்டுமென்ற கோரிக்கைக்காக ஏற்கனவே தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடங்களை struckoff செய்திட தேவையில்லை என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

9. ஏற்கனவே ஐ.ஏ.3/2022 மனுவில் நியமனம் செய்யப்பட்ட ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகளின் தார்சு வீடு கிழக்கு பகுதி பழமையாக காணப்பட்டது என்றும், மேற்கு பகுதி புதிதாக கட்டப்பட்டிருந்தது என்றும், மேற்கு பகுதி வாதிக்கு கிரையப்பத்திரம் என்று வாதியால் கூறப்பட்டது என்றும், அது வாதிக்கு பாத்தியமான 11x30 அளவிற்குள் கிழமேல் 1 மீட்டரும், தென்வடல் 8 மீட்டரும் கட்டப்பட்டிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு வாதிக்கு பாத்தியமான இடத்தில் 11x30 அளவிற்குள் கிழமேல் 1 மீட்டரும், தென்வடல் 8 மீட்டரும் கட்டப்பட்டதை காண்பிக்கக்கூடிய வகையில் வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஆணையர் தனது அறிக்கையில், மேற்படி பிரதிவாதி வாதியின் இடத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளதாக யாதொரு இடத்திலும் குறிப்பிடவில்லை. அதே சமயம் மேற்கண்டவாறு 11x30 அளவிற்குள் என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் வாதியின் இடத்தில் பிரதிவாதி வீடு கட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி இந்த நிர் மனுவை பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகளை அனுசரித்து ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்ற அடிப்படையிலும், தாவா சொத்தில் மனுதாரரின் வீடு எவ்வளவு காலத்திற்கு முன்பு கட்டப்பட்டது என்பதையும், அதன் வயது மற்றும் கட்டுமானத்தின் தன்மை குறித்து அறிய கட்டிட பொறியாளர் உதவியுடன் அளவை செய்து பொறியாளரிடம் அறிக்கை பெற்றும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடுமாறு இந்த நிர் மனு தாக்கல் செய்துள்ளார்.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.05 16:45:47 +0530

10. மேற்படி பொறியாளர் உதவியுடன் அறிக்கை தாக்கல் செய்ய கோருவது மூலம் தாவா வழக்கு காலவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை தீர்மானிக்க வேண்டியும், வழக்கில் சாட்சியத்தை திரட்ட வேண்டியும் மனு தாக்கல் செய்திருப்பதாக அறிய முடிகிறது. வழக்கில் சாட்சியங்களை திரட்டுவதற்காக ஆணையர் நியமன உத்தரவு செய்திட முடியாது என்ற அடிப்படையிலும், உரிய காரணமின்றி முந்தைய ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை strikeout செய்திட முடியாது என்ற அடிப்படையிலும், மனுதாரரின் மனு நிலைநிற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் வருடம் நவம்பர் மாதம் 05–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.05 16:45:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்– இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.11.05 16:46:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்